1987 ஏப்ரல் 25]

நின்று விடுகிறது. அந்த நிலையிலே, தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற வாய்க்கால்கள் எல்லாம் சில இடங்களிலே மேடாகவும், சில இடங்களிலே பள்ளமாகவும் உள்ளதால், சரியான முறையில் நீர்ப்பாசனத்திற்கு வசதி இல்லாமல் இருக்கிறது. இந்தக் காலம் மிகவும் வறட்சியான காலமாக இருக்கின்ற காரணத்தால், இந்த ஆண்டு, அந்தப் பகுதி மக்களுக்கு வேலை கொடுப்பதற்கு வாய்ப்பாகவும், அந்த வாய்க்கால்களை தூர் எடுக்க வாய்ப்பாகவும், போதுமான விசேஷ நிதியை ஒதுக்கி இந்த ஆண்டிலே மராமத்து வேலைகளைச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வருஷம் ஏறத்தாழ இதற்காக ரூ. $1\frac{1}{2}$ கோடி அளவுக்கு ஒதுக்கியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் எந்த வாய்க்கால் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டம் பாலாறு அணைக்கட்டு.

509—(*வினா எண் 9088) திரு. த. பழனி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் பாலாறு அணைக்கட்டில் உள்ள அணைக்காவலர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அதனை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் நான்கு கரைக்காவலர்கள் பணிபுரிகின்றனர்.

(ஆ) ஆம்.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிற பாலாறு அணைக்கட்டில் ஏற்கெனவே 12 கரைக் காவலர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அந்த 12 பேரில் 8 கரைக் காவலர்கள் இறந்துவிட்ட பிறகு அந்த இடங்களுக்கு புதிதாக ஆட்களை நியமித்து அந்தப் பதவிகள் பூர்த்தி செய்யப்படவில்லை. அப்படிப்பட்ட இடங்களைப் பூர்த்தி செய்ய அரசு முன்வருமா என்று கேட்டுக் கொள்வதோடு, அப்படிச் செய்யும்போது இறந்து

போன கரைக் காவலர்களுடைய பிள்ளைகளுக்கே அந்தப் பணி கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் அவர்கள் பணியில் இருக்கும்போதே இறந்துவிட்டதால் அந்தக் குடும்பத்தில் உள்ள அவர்களுடைய வாரிசுகளுக்கே அந்த வேலைகள் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்போது கரைக் காவலர் பதவிகளை நிரப்புவது தொடர்பாக சில நார்ம்ஸ் ஃபிக்ஸ் செய்து அந்த அளவுக்குக் கரைக் காவலர்கள் நியமிக்கப்படலாம் என்று அந்தந்தப் பகுதியில் உள்ள அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறோம். அப்படிக் குறைவாக இருந்தால் அந்தப் பகுதிகளில் கரைக் காவலர்களை அதிகரிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறோம். பணிக் காலத்தில் இறந்தவர்களுடைய குடும்பத்தில் உள்ளவர்களுக்கே அந்த வேலை கொடுக்க முடியுமா என்பதை ஆராய்ந்து பார்த்துதான் சொல்ல முடியும்.

திரு. த. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே போடப்பட்டிருக்கிற கரைக் காவலர்கள் எல்லாம் அங்கே இருக்கிற பொதுப்பணித்துறை இல்லங்களிலேதான் வாட்ச்மென்களாகப் போடப்பட்டிருக்கிறார்கள். கரையைக் காப்பதற்காக நியமிக்கப்பட்ட அந்தக் கரைக் காவலர்கள் அணைக்கட்டில் பணியாற்றுவது கிடையாது. பொதுப்பணித் துறை ஆய்வாளர் மாளிகையிலேயே அவர்கள் குடியிருக்கிற காரணத்தால் அங்கேயே வாட்ச்மென்களாகப் பணியாற்றுகிறார்கள். எனவே கரைக் காவலர்களாகப் போடப்படுகிறவர்கள் கரைக் காவலர்களாகவும், பொதுப் பணித் துறையைச் சார்ந்த ஆய்வாளர் மாளிகைக்கு தனியாக வாட்ச்மென்கள் நியமிக்கப்பட்டு பணி புரிய வேண்டும் என்றும் அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : அப்படி எங்காவது தவறுதலாக நடந்து கொண்டிருக்கிறது என்று எனக்குச் சுட்டிக்காட்டினால் அதுபற்றி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உசிலம்பட்டி தாலுக்கா வைகை மேம்பாட்டுத் திட்டம்.

510—(*வினா எண் 9386) திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தாலுக்காவில், வைகை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், வைகை கால்வாய் நவீனப்படுத்துதல் திட்டத்தில், 58 கிராம கால்வாய் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளதா?